**விவசாயிக்கு மின் இணைப்பு வழங்க லஞ்சம், இளமின்பொறியாளருக்கு சிறைதண்டனை.**

ஈரோடு மாவட்டம் அந்தியூர் பனங்காட்டூரை சேர்ந்த விவசாயி திரு.A.M.ஈஸ்வரமூர்த்தி என்பவருக்கு சொந்தமான குடோனுக்கு மின் இணைப்பு வழங்க தக்க நடவடிக்கை மேற்கொள்ள லஞ்சம் கேட்டு அலைகழித்த, அந்தியூர் தவிட்டுப்பாளையத்தில் உள்ள தமிழ் நாடு மின்சாரவாரிய இளமின்பொறியாளர் திரு.C.ராமலிங்கம் என்பவர் மீது வழக்கு பதிவு செய்து, லஞ்சப்பணம் ரூ.10,000/- பெறும்போது, கையும் களவுமாக 03.03.2005ம் தேதி ஈரோடு லஞ்ச ஒழிப்பு துறையினரால் கைது செய்யப்பட்ட வழக்கில் இன்று 19.12.2022ம் தேதி ஈரோடு தலைமை குற்றவியல் மற்றும் தனி நீதிபதி திரு.சரவணன், B.A. LLB, அவர்களால் தீர்ப்பு வழங்கப்பட்டது. திரு.C.ராமலிங்கம் குற்றவாளி என்று தீர்மானித்து, அவருக்கு ஊழல் தடுப்பு சட்டப்பிரிவு 7-ன்கீழ் மூன்று ஆண்டுகள் கடுங்காவல் தன்டனையும் அபராதமாக ரூ.5,000/-மும் அபராதம் கட்ட தவறினால் ஒரு மாதம் சிறை தண்டனையும், ஊழல் தடுப்பு சட்டப்பிரிவு 13(1)(d) -ன்கீழ் மூன்று ஆண்டுகள் கடுங்காவல் தன்டனையும் அபராதமாக ரூ.5,000/-மும் அபராதம் கட்ட தவறினால் ஒரு மாதம் சிறை தண்டனையும், இவ்விரு தண்டனைகளையும் ஏககாலத்தில் அனுபவிக்கவும் உத்திரவிட்டு தீர்ப்பு வழங்கப்பட்டது.